DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU**

Calendar

Miscellaneous

Preliminary Register Case No.C.C. 34 of 2024 PW : 4

Sessions

Prosecution

Deposition of witness for Defence

Court

Name : திரு. ஜீவரத்தினம்

Husband's Name : திரு. சுப்பிரமணி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age : 65

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.04.2026.

**தேதி.27.04.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 34/2024, அ.த.சா.4 திருமதி.ஜீவரத்தினம் க/பெ. சுப்பிரமணி என்பவருக்கு தெலுங்கு மொழி மட்டுமே தெரியும் என்பதால் மொழிப்பெயர்பாளர் வேண்டி அரசுத்தரப்பில் மனு செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு மொழிப்பெயர்பாளர் மோகன் த/பெ. நாராயண செட்டி வயது 61 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பின்னர் அ.சா. 4 மொழிப்பெயர்பாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் மொழிப்பெயர்பாளரிடம் கேள்வி கேட்கப்பட்டு நீதிமன்றத்தில் மொழிப்பெயர்பாளர் மூலம் சாட்சி மற்றும் எதிரி மற்றும் எதிரி வழக்கறிஞருக்கு தெரிவிக்கப்பட்டு ஆட்சேபணை இன்றி முதல் விசாரணை செயய்ய அனுமதிக்கப்படுகிறார்.**

முதல் விசாரணை

நான் தற்போது முனுசாமி நாயுடு கண்டிகையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் அவர் பெயர் அனந்தா. இவ்வழக்கின் புகார்தாரர் விவேக் எனது பேரன் ஆவார். சாட்சி மீனா எனது பக்கத்து வீட்டுகாரர். சாட்சி சுமதி எனது மகள் ஆவார். தேதி மாதம் எனக்கு நினைவில்லை. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 05.00 மணிக்கு என் வீட்டின் முன்பு இருந்து எலுமிச்சை பழத்துடன் இருந்த மரத்தை ஆஜர் எதிரி வெட்டினார். இதை நான் எதிரியிடம் ஏன் இவ்வாறு செய்கிறாய் என்று கேட்டதற்கு என் வீட்டினுள் நுழைந்து என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று என் கழுத்தை நெறுக்கினார். மேலும் என்னை விபசாரி முன்ட என்றும் என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார். பிறகு எனது மருமகன் தனஞ்செயன் வந்தவுடன் ஆஜர் எதிரி அங்கிருந்து சென்று விட்டார். பின்னர் எனது பேரன் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கிருஷ்ணன் கோவில் தெருவில் தான் குடியிருந்து வருகிறேன். எனது பேரன் வீடு ஐயங்கார் தெருவில் உள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரியும் நானும் ஒரே தெருவில் பல ஆண்டு காலம் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். இந்த சம்பவம் நடைபெறுவதற்கு

முன்பாக எனது கனவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது கனவர் இறந்த விவரத்தை நான் காவல் நிலையத்தில் தெரிவித்தேனா என்றால் இல்லை. எலுமிச்சை மரத்தை வெட்டிய விவரம் எனக்கு மறுநாள் தெரியவந்தது என்றால் சரிதான். நானும் எதிரியும் உறவினர்கள் தானா என்றால் இல்லை. இதற்கு முன்பாக எதிரியின் மீது நான் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. இந்த சம்பவம் நடந்தவுடன் ஊரில் யாரிடமாவது தெரிவித்தேனா என்றால் இல்லை நான் நேரடியாக காவல் நிலையத்தில் தெரிவித்தேன். நான் போலீஸ் விசாரணையில் தெரிவித்த வார்த்தைகளை எதிரி என்னை பார்த்து கேட்கும் போது வேறு யாராவது கேட்டார்களா என்றால் கண்ணப்ப ரெட்டி என்பவர் கேட்டார். இந்த விவரத்தை போலீஸ் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த பிறகு நான் அதே வீட்டில் தான் வசிக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு வெளிக்காயம் எதுவும் ஏற்படவில்லை. உள்காயம் மட்டும் தான் இருந்தது. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. எனது மருமகனுக்கும் ஆஜர் எதிரிக்கும் பக்கத்து பக்கத்தில் நிலம் இருப்பதால் அவர்களுக்குள் நில பிரச்சனை இருந்து வருகிறது என்றும் அதற்காக தான் இந்த பொய் புகாரை ஆஜர் எதிரியின் மீது கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது அருகில் இருந்தவர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்று சொன்னால் அவர்கள் எனது ஊர்காரர்கள்.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒப்பம் A. தரணிதரன்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்,**

**பள்ளிப்பட்டு**